பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

09 10 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டிஜிட்டல் கட்டமைப்பில் உலகளாவிய தர நிர்ணயத்தை இந்தியா உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்தை கைவிட்டால் மட்டுமே, பேச்சுவார்த்தை நடத்துவது என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. ஜம்மு காஷ்மீரிலிருந்து தீவிரவாதத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

4. மத்தியப்பிரதேசத்தில் இருமல் மருந்து அருந்தி 23 குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

**5.** ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<>>>>>

டிஜிட்டல் கட்டமைப்பில் உலகளாவிய தர நிர்ணயத்தை இந்தியா உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மும்பையில் இன்று உலகளாவிய நிதிசார் தொழில்நுட்ப மாநாட்டில் பேசிய அவர், உலக அளவில் புதுமையான மற்றும் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியில் தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தும் நாடாக இந்தியா உள்ளது என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு மாதமும் 20 பில்லியன் மின்னணு பணப்பரிவர்த்தனைகள் இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விழாவில் பேசிய பிரிட்டன் பிரதமர் திரு Keir Starmer நிதி தொழில்நுட்பத்தில் பிரிட்டனும் – இந்தியாவும் இயல்பான நட்பு நாடுகளாகவே திகழ்ந்து வருவதாக கூறினார்.

இருதரப்பு, தாராள வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளிலும் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்குமே பெரிய வெற்றியை தேடித்தந்துள்ளதாகவும் பிரிட்டன் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக, பிரிட்டன் பிரதமருடன், பிரதமர் திரு நரேந்திர மோடி நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தைகளின்போது தொழில்நுட்பம், பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, நீடித்த வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த சந்திப்புக்குப்பின் இரு தலைவரக்ளும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசுகையில், ஒட்டுமொத்த உலகின் அரசியல் நிலைப்பாடு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் இரு நாடுகளும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும், வர்த்தகத்தை விரிவுபடுத்தும் என்றும் தெரிவித்தனர்.

<<<<<>>>>

தீவிரவாதத்தை கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவது என்ற நிலைபாட்டில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப்பயணமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள திரு ராஜ்நாத் சிங், தலைநகர் கான்பராவில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு Richard Marles – உடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, தீவிரவாதமும் – வர்த்தகமும், தண்ணீரும் – ரத்தமும் ஒரே நேரத்தில் செல்ல முடியாது என்றும் கூறினார்.

இந்தியா – ஆஸ்திரேலியா இடையிலான ஆழமான கலாச்சார தொடர்புகள் பற்றி குறிப்பிட்ட அவர், இருநாடுகளும் ஜனநாயக மாண்புகளை கடைபிடித்து வருவதையும் சுட்டிக்காட்டினார்.

இருதரப்பு உறவுகள் வலுப்பெற்றிருப்பதால், பாதுகாப்பு ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுக்களுக்குப்பின், அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை பகிர்ந்துகொள்ளுதல், நீர்முழ்கி கப்பல்கள் கண்காணிப்பு, மீட்புப்பணிகளில் ஒத்துழைப்பு ஆகியவற்றில் மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

கூட்டு ராணுவப்பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் ஒத்துழைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் கூட்டாக ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்வது உள்ளிட்டவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரிலிருந்து தீவிரவாதத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு நிலைமை குறித்து நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், நாட்டில் பாதுகாப்பு அமைப்புகள் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத கட்டமைப்புகள் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜம்ம காஷ்மீரில் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக செயல்படுவோர் மீது பாதுகாப்பு அமைப்புகள் உறுதியான நடவடிக்கை எடுப்பதற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகவம் அவர் தெரிவித்தார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து, இப்பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பாதுகாப்பு அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>

உலகின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் மையமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கு வேளாண்மையில் தற்சார்பு, தொழில்துறையில் ஒத்துழைப்பு ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் செளகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக வசுதெய்வ

குடும்பகம் என்ற தாரக மந்திரத்துடன் இந்தியா செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியாவின் நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும் உலக அளவில் நன்மதிப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுயநலத்தை கைவிட்டு, ஒட்டுமொத்த சமுதாய நலனையும் கருத வேண்டும் என்ற திடமான பாரம்பரிய சிந்தனையை இந்திய மக்கள் கடைபிடித்து வாழ்வதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>

இந்திய தொழில் முனைவோரும், தொழில் நிறுவனங்களும், உள்நாட்டு தேவைக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகிற்கும் தேவையான பொருட்களையும், சேவைகளையும் வழங்கி வருவதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்திய மொபைல் மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று உரையாற்றிய அவர், கடந்த 15 ஆண்டுகளில் நாட்டில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதில் 73 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்கள் மகளிரால் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது 120 கோடி செல்ஃபோன் சந்தாதாரர்கள் இருப்பதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறினார்.

<<<<<>>>>

நாட்டில் உள்ள தூய்மைப் பணியாளர்களின் சமூக பாதுகாப்பையும், கண்ணியத்தையும் உறுதி செய்ய மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய சமூக நீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கோவாவில் மத்திய அரசின் இயந்திரமயமாக்கப்பட்ட துப்புரவுப் பணி திட்டத்தை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியின் போது, தூய்மைப் பணியாளர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீடு அட்டை, பாதுகாப்புக் கவச உபகரணங்களையும் அமைச்சர் திரு. வீரேந்திர குமார் வழங்கினார்.

<<<<<>>>>

உலக அஞ்சல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

தேசிய அஞ்சல் வாரம் இம்மாதம் 6-ஆம் தேதி தொடங்கி, 12-ஆம் தேதி வரை கடைபிடிக்கப்படுகிறது.

நாட்டில் அஞ்சல்துறையின் சேவைகள் கடைமடைப்பகுதிகளிலும் தொய்வின்றி கிடைத்து வருகிறது.

தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் உள்ள மலைகிராமங்களில் அஞ்சல் பணியாளர்கள் சவாலான பணியை மேற்கொண்டு வருவதாக சேலம் கிழக்கு அஞ்சல் கோட்ட உதவி கண்காணிப்பாளர் திரு பரமேஷ்வரன் தெரிவித்தார்.

அஞ்சல் சேவை தங்களுக்கு தடையின்றி கிடைத்து வருவதாக கீழ்புளியூர் கிராமத்தை சேர்ந்த திருமதி பூங்கொடி தெரிவித்தார்.

<<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் இருமல் மருந்து அருந்தி, 22 குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

போபாலில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதில் தொடர்புடைய அனைவருக்கும் எதிராக

சட்ட ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<<>>>>

இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஹங்கேரி எழுத்தாளர் திரு Laszlo Krasznahorkai –க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Satantango, Herscht உள்ளிட்ட பல்வேறு தொலைநோக்கு பார்வைகொண்ட படைப்புகளுக்காக அவருக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், மலேசியாவின் ***Anrie Goh*** -ஐ வென்றார்.

----------------

குவஹாத்தியில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<END>>>>